*உங்கள் சகோதரனிடமிருந்து...*

கரம் பிடித்து வழிநடத்தி நம்மேல் தம் கண்ணை வைத்து ஆலோசனை சொல்லி, வழிநடத்தி வந்த அன்பராம் இயேசு கிறிஸ்வின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த வருடத்தின் இறுதி மாதத்தில் பிரவேசிக்க கிருபை செய்த தேவனைத் துதியுங்கள்.

இந்த மாதமும் நமக்கு சிறுவர் முகாம் குடும்ப முகாம்கள் உள்ளது. அவைகளை தேவன் ஆசீர்வாதமாக்கி நடத்தித்தர ஜெபியுங்கள். துதியுங்கள். மேலும் பண்டிகை நாட்கள் ஆன படியால் ஆலயமில்லாத கிராமங்களில் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் மூலம் சுவிசேஷம் அறிவிக்கப்பட எடுக்கப்படும் எல்லா முயற்சிகளும் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

பண்டிகை நாட்களில் ஏழை மக்களுக்கு நாம் செய்யும் உதவிகள் ஏற்ற சமயத்தில் போய் சேர ஜெபியுங்கள். மாற்றுத்திறனாளிகள் விடுதிகள், குஷ்டரோகிகள் விடுதி. எய்ட்ஸ் நோயாளிகள் விடுதி, ஏழை மாணவமாணவியர் விடுதிகள் ஆகியவற்றில் நாம் வருடந்தோறும் செய்கிற உதவிகள் சுவிசேஷ அறிவித்தல் ஆகியவற்றிற்காக ஜெபியுங்கள். ஆண்டுதோறும் நமது மிஷனரிகளுக்கு செய்யப்படும் பண்டிகைக்கால வெகுமதிகளுக்காக ஜெபியுங்கள். இவை யாவற்றின் தேவை சந்திக்கப்பட உங்கள் ஊக்கமான ஜெபத்தையும் உதவியையும் நாடுகிறோம்.

தேவன் பண்டிகைக்காலத்தில் உங்கள் குடும்பத்தின் தேவைகளையும் பிள்ளைகளின் தேவைகளையும் சந்திக்க இந்த நாட்கள் மெய்யாகவே உங்கள் குடும்பத்தின் ஆசீர்வாத நாட்களாக இருக்க ஜெபிக்கிறோம்.

தேவன் ஈவாய் தந்திருக்கிற இந்த 12ஆவது மாதத்தை புதிய ஆண்டு பிரவேசத்திற்கு ஜெபித்து ஆயத்தப்படும் நாட்களாய் பயன்படுத்துங்கள். இந்த மாதத்தில் ஒருநாளாவது உபவாசித்து ஜெபிக்க ஒதுக்குங்கள். தேவன் அதற்கான வாய்ப்பையும் கிருபையும் தர ஜெபிக்கிறோம்.

விசேஷமாக புதிய ஆண்டில் நம்முடைய தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக ஜெபியுங்கள். நமது மாநிலத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் மின்சாரத் தட்டுப்பாடு பிரச்சனை குறித்து சரியான தீர்க்கமான முடிவை எடுக்க மாநிலத்தில் புதிய ஆண்டில் தேவன் நல் மாற்றத்தைக் கொண்டு வர ஜெபியுங்கள். பல விழாக்களில் கொண்டாட்டங்களில் கூட்டங்களில் மதமென்றும் அரசியலென்றும் வேற்றுமையில்லாது திருடப்படும் மின்சாரம் தடுத்து நிறுத்தப்பட்டாலே பெறும் மாற்றத்தைக் கொண்டுவரலாமே இதற்காக ஊக்கமாக ஜெபியுங்கள்.

உங்களுக்காக ஜெபிக்கும் சகோதரன்
**பா. பொற்செல்வன் ஆசீர்**

---


**I – Jesus Christ – have called you friends** John 15:15

ஜெபியுங்கள்! **Philio - 2013** ஜெபியுங்கள்!!

**தூத்துக்குடியில் இளைஞர் இனிய பெருவிழா**

நாள் : 14-2-2013 வியாழக்கிழமை *(Valentine Day)* மாலை 4.30 – 8.00 மணி முடிய

இடம் : **காய்கனி மார்க்கெட் மைதானம் VOC கல்லூரி எதிரில்**

*செய்தியாளர் :* அண்ணன் **மோகன் C. லாசரஸ்** இயேசு விடுவிக்கிறார்

தொடர்பு : **கிருபையின் ஊழியங்கள் – 94432 89026, 94421 20257**

**(இயேசுகிறிஸ்து) நான் உங்களைச் சிநேகிதர் என்றேன்.** யோவான் 15:15




## நான் என்ன செய்ய வேண்டும்?

**தொடர் - 51**
**டிசம்பர் 2012**

**எசேக்கியேல்** *தொகுப்பு :* **Dr. B. வில்லியம் தர்ம ராஜா**

2501 கர்த்தரை மறந்து விடாதே (22:12)

2502 கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின் படிசெய் (33:32)

2503 நெரிஞ்சில்களுக்குள்ளும் முள்ளுகளுக்குள்ளும் நீ தங்கியிருந்தாலும் நீ தேள்களுக்குள் வாசம் பண்ணினாலும், நீ கலகவீட்டாரின் வார்த்தைகளுக்குப் பயப்படாமலும், அவர்கள் முகத்துக்குக் கலங்காமலுமிரு. (2:6)

2504 கலகவீட்டார் கேட்டாலும் சரி, கேளாவிட்டாலும் சரி, நீ என் வார்த்தைகளை அவர்களுக்குச் சொல்லு (2:7)

2505 நீ கலகவீட்டாரைப் போலக் கலகக்காரனாயிராதே (2:8)

2506 காவலாளனே/காவற்காரனே, (ஊழியக்காரனே!) நீ என் வாயினாலே வார்த்தையைக் கேட்டு, என் நாமத்தினாலே எச்சரிப்பாயாக (3:17; 33:7)

2507 நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கமான வழியில் இராதபடிக்கு எச்சரி (3:18)

2508 நீதிமான் தன் நீதியை விட்டுத் திரும்பி, நீதிக்கேடு செய்யும் போதும், நீ அவனை எச்சரி (3:20)

2509 தீர்க்கதரிசியே! கர்த்தர் உன்னை அனுப்பாதிருந்தும் (உரைக்காதிருந்தும்) கர்த்தர் உரைத்தாரென்று சொல்லாதே (13:6,7, 22:28)

2510 தீர்க்கதரிசியே! அபத்தமான தரிசனத்தைத் தரிசித்து, பொய்க்குறியைச் சொல்லாதே (13:6,7,8,9; 22:28)

2511 தீர்க்கதரிசியே! சமாதானம் இல்லாதிருந்தும் சமாதானமென்று சொல்லி, என் ஜனத்தை மோசம் போக்காதே (13:10)

2512 தீர்க்கதரிசியே! பொய்ச் சாஸ்திரத்தை ஜனங்களுக்குச் சொல்லாதே (22:28)

2514 ஆசாரியனே! கர்த்தருடைய வேதத்துக்கு அநியாயஞ்செய்யாதே (22:26)

2515 ஆசாரியனே! என் பரிசுத்த வஸ்துக்களைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதே (22:26)

2516 ஆசாரியனே! பரிசுத்தமுள்ளதற்கும் பரிசுத்தமில்லாததற்கும் வித்தியாசம் பண்ணு; அசுத்தமுள்ளதற்கும் அசுத்தமில்லாததற்கும் வேற்றுமையைக் காண்பி (22:26)

2517 ஆசாரியனே! என் ஓய்வுநாட்களுக்கு உன் கண்களை மூடிக்கொள்ளாதே (22:26)

2518 ஆசாரியனே! ஜனங்கள் நடுவிலே கர்த்தரைக் கனவீனம் பண்ணாதே (22:26)

2519 மேய்ப்பனே! உன்னையே மேய்க்காதே (34:2,9), மந்தையை மேய்ப்பாயாக (34:3,8)

2520 மேய்ப்பனே! பலவீனமானவைகளைப் பலப்படுத்து (34:4)

2521 மேய்ப்பனே! நசல் கொண்டவைகளைக் குணமாக்கு (34:4); திடப்படுத்து (34:16)

2522 மேய்ப்பனே! துரத்துண்டவைகளைத் திருப்பிக் கொண்டு வா (34:4,16)

2523 மேய்ப்பனே! காணாமற் போனவைகளைத் தேடு (34:4,12,16)

2524 மேய்ப்பனே! பலாத்காரமும் கடூரமுமாய் மந்தையை ஆளாதே (34:4)

2525 "மேய்ப்பனே! என் ஆடுகளை விசாரி" (34:7,11)

2526 மேய்ப்பனே! சிதறுண்டு போன எல்லா இடங்களிலிருந்தும் ஆடுகளைத் தப்பிவரப்பண்ணு (34:12)

2527 மேய்ப்பனே! ஆடுகளை மலைகளின் மேலும் ஆறுகள் அண்டையிலும் தேசத்தின் சகல வாசஸ்தலங்களிலும் மேய்ப்பாயாக (34:13)

2528 மேய்ப்பனே! ஆடுகளை நல்ல மேய்ச்சலிலே மேய்ப்பாயாக (34:14)
2529 மேய்ப்பனே! நியாயத்துக்குத்தக்கதாய் ஆடுகளை மேய்ப்பாயாக (34:16)
2530 நீ நல்ல மேய்ச்சலை மேய்த்து, மேய்ச்சல்களின் மீதியானதை உன் கால்களால் மிதிக்கலாமா? (34:18)
2531 தெளிந்த தண்ணீரைக் குடித்து, மீதியாயிருக்கிறதை உன் கால்களால் குழப்பிப் போடலாமா? (34:18)
2532 பலவீனமாயிருக்கிறவைகளை புறம்பாக்கி, உன் கொம்புகளால் முட்டாதே (34:21)
2533 பிரபுவே! இரை கவ்வுகிற ஓநாயைப் போலிராதே; அநியாயமாய் பொருள் சம்பாதியாதே; ஆத்துமாக்களைக் கொள்ளையிடாதே (22:27)
2534 அதிபதியே! நீ கொடுமையையும் கொள்ளையிடுதலையும் தவிர்த்து, நியாயத்தையும் நீதியையும் செய் (45:9)
2535 காவற்காரனே! பட்டயம் வருவதைக் கண்டும், எக்காளம் ஊதாமலும் ஜனங்களை எச்சரியாமலும் இராதே (33:6)
2536 மனுப்புத்திரனே, துர்ச்செய்தி வருகிறததினிமித்தம் உன் இடுப்பு நொறுங்கும்படி பெருமூச்சுவிடு (21:6,7)
2537 நீதிமானே! நீ துரோகம் பண்ணாதே; பாவஞ்செய்யாதே (33:12,18)
2538 நீதிமானே! நீ உன் நீதியை நம்பி, அநியாயஞ் செய்யாதே (33:13)
2539 சீயென்றிகழப்படத்தக்கதும் அருவருக்கப்படத்தக்கதுமானகிரியைகள் வேண்டாம் (5:11)
2540 பலவானே! பெருமை கொள்ளாதே (7:24)
2541 உன் அழகை அருவருப்பாக்காதே (15:25)
2542 அயலானுடைய மனைவியைத் தீட்டுப்படுத்தாதே (18:6)
2543 சிறுமையும் எளிமையுமானவனை ஒடுக்காதே (18:7,12)
2544 ஒருவனையும் கொள்ளையிடாதே (18:7)
2546 நீதியை விட்டு விலகாதே (18:26)
2547 கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணாதே (20:27)
2548 கர்த்தரை தூஷியாதே (20:27)
2549 பரதேசிக்கு இடுக்கண் செய்யாதே (22:7)
2550 உனக்குள் திக்கற்றவனையும் விதவையையும் ஒடுக்காயாக (22:7)

## குடும்ப மனமகிழ்ச்சி முகாம்கள்

நாள் : **2.12.2012 காலை 10 மணி முதல் மாலை4 மணி முடிய.**
இடம் : **கிருபையின் ஆலயம். அழகப்பபுரம்.**
தேவ செய்தி : **Prof. K. ∴பிராங்மெரின் & சகோ. S. ஜெபராஜ்.**
தொடர்பு : 94424-55483, 9443-89026.

நாள் : **2.12.2012 காலை 10 மணி முதல் மாலை 4 மணி முடிய.**
இடம் : **கிருபையின் ஆலயம் பண்டுதன் பட்டி.**
தேவ செய்தி : **சகோ. S. ஞானராஜ் B.E.**
**சகோ.B. பொற்செல்வன் ஆசீர்.**
தொடர்பு: 94860 04716, 94432 89026.



# கிறிஸ்துமஸ் முதற் பாடல்

சகோ. **S. ஜெபராஜ்** President,Grace Ministries

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, உங்கள் அனைவருக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் எங்கள் அன்பின் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள். பெத்லகேமில் பிறந்த இயேசுகிறிஸ்து நம் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் வாசமாயிருப்பதால் அவருடைய பரிசுத்த நாமத்திற்கே மகிமை உண்டாவதாக. கர்த்தருக்கு புதுப்பாட்டை பாடுங்கள். பூமியின் குடிகளே, எல்லோரும் கர்த்தரை பாடுங்கள் (சங்:96,1) தாவீது லேவியரின் பிரபுக்களை நோக்கி: நீங்கள் உங்கள் சகோதரராகிய பாடகரைத் தம்புரு, சுரமண்டலம் கைத்தாள முதலிய கீத வாக்கியங்கள் முழங்க, தங்கள் சத்தத்தை உயர்த்தி, சந்தோஷம் உண்டாகப் பாடும்படி நிறுத்த வேண்டும் என்று சொன்னான் (1நாளா15:16). கிறிஸ்து பிறப்பின் நாட்களை கொண்டாடுகிறவர்களுக்கு பாடல்களை பாடுவதும் கேட்பதும் பாடல்கள் பாடி மற்றவர்களை வாழ்த்தி மகிழ்விப்பதும் அனைவரும் விரும்புகிற செயலாகும். பாடல்கள் எப்படி பட்டதாயிருக்க வேண்டும்? இன்றைய நாட்களில் அநேக கிறிஸ்தவ ஆவிக்குரிய பாடல்கள் கூட அர்த்தமற்ற அலங்கார வார்த்தைகளால் நிறைந்ததாகவும் வேத வசனத்திற்கு புறம்பானதாகவும், செவிக்கினிய இசைக்கு மாத்திரம் இணைந்தாகவும் காணப்படுகிறது. பாடல்கள் எப்படி இருக்கவேண்டும் என்ற சில கருத்துக்களைக் கற்றுக்கொள்வது நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன் (1கொரி1415) என்ற வசனத்திற்கிசைந்தவர்களாய் நம்மை மாற்றும்.

லூக்கா1:46-56 முடிய உள்ள வசனங்கள் மரியாளின் பாடல் என்றழைக்கப்படுகிறது திருச்சபை இப்பாடலை கிரமமாக தன்னுடைய ஆராதனைகளில் பயன்படுத்தி வருகிறது. இயேசுவின் பிறப்பு தேவ தூதனால் மரியாளுக்கு அறிவிக்கப்பட்டபொழுது மரியாள் சகரியாவின் மனைவியாகிய எலிசபெத்தை சந்தித்தபோது தேவனை மகிமைப்படுத்தி பாடின பாடல் இது. இப்பாடலைத்தான் முதல் கிறிஸ்துமஸ் பாடல் என்று அழைக்கலாம்.

அநேகர் லுக்கா:2:13,14ல் உள்ள பரம சேனையின் திரள் துதித்த துதியை பாடல் என்று கூறுவார்கள். உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும் மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லித் தேவனைத் துதித்தார்கள் என்றுதான் வேதம் கூறுகிறது அவர்கள் பாடியதாக வேதம் கூறவில்லை. ஏசாயா:6:3லும் சேராபின்கள் ஒருவரையொருவர் நோக்கி சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள். என்று வேதம் சொல்லுகிறதே ஒழிய பாடினார்கள் என்று சொல்லவில்லை.

வெளி:5:9-12 வாசிக்கும்போது மீட்டுக்கொள்ளப்பட்ட ஜனங்கள் புதிய பாட்டைப் பாடினார்கள் என்று சொல்லுகிறது. ஆனால் அனேக தூதர்களுடைய

சத்தத்தைக் கேட்டேன் என்கிற யோவான் 12ஆம் வசனத்தில் அவர்களும் மகா சத்தமிட்டு: அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள் என்று வேதம் சொல்லுகிறதே ஒழிய பாடினார்கள் என்று சொல்லவில்லை. அதேபோல் வெளி:7:11,12 வசனங்களிலும் தூதர்கள் பாடவில்லை என்பதை காண்கிறோம். முழுவேதாகமத்திலும் தேவதூதர்கள் பூலோகத்திலோ பரலோகத்திலோ பாடினதாக எந்தக் குறிப்பும் இல்லை. ஆனால் பாடல்கள் வேதாகமத்தில் எப்போதும் மனிதர்களோடு சம்பந்தப்பட்டுத்தான் எழுதப்பட்டிருக்கிறது. வேதத்தின்படி பாடும் கிருபை தேவன் மனிதர்களுக்கு அளித்த பெரும் ஈவு ஆகும். அது மனிதர்களுக்கு தேவன் அளித்த தனிப்பட்ட கிருபை ஆகும். இப்படியிருக்க நாம் தேவ சமூகத்தில் பாடும்போது எத்தனை பயத்தோடும் பக்தியோடும் பாட வேண்டும் என்பதை மறக்கக்கூடாது. இன்றைக்கு அநேக நேரங்களில் ஆலயங்களிலும் கூட்டங்களிலும் பாடல்கள் மனிதர்களைப் பரவசப்படுத்தவே பாடப்படுகிறது. ஆனால் பாடல்களோ தேவனை மகிமைப்படுத்துவதாயும், தேவனுடைய உள்ளத்தை பரவசப்படுத்துவதாயும் இருக்க வேண்டும் என்று பாடுவோர் எத்தனை பேர். ஏத்தனை ஆராதனைகளில் தேவனுடைய உள்ளம் மகிழ்ச்சியடையப்பண்ணப்படுகிறது. மக்கள் கூட்டம் கவர்ச்சிக்கப்படுவதற்காய் உலக பிரகாரமான பாடல்கள் எழுதப்படுகின்றன, பாடப்படுகின்றன ஆவிக்குரிய பாடல்கள் காட்ட வேண்டிய வித்தியாசத்தை இன்றைக்கு அநேக பாடல்கள் இழந்து போய் நிற்கின்ற பரிதாபத்தை நாம் அநேக கிறிஸ்தவப் பாடல்களில் காணமுடிகிறது. உலக பார்வையில் பரவசம் நிறைந்த அநேக கிறிஸ்தவ பாடல்கள் தேவப் பார்வையில் பரிதாபம் நிறைந்தவைகளாய் இருக்கின்றன என்பதை மறவாதிருக்கட்டும் இன்றைய திருச்சபை. கிறிஸ்துமஸ்ஸின் முதல் பாடல், நாம் பாடும் பாடல்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதை நமக்கு சுட்டிக்காட்டுகிறது. நம் பாடல்கள் வெறும் பரவசத்தை அல்ல பரிசுத்தத்தை கொண்டு வரட்டும்.

*கிறிஸ்துமஸ் முதல் பாடலான மரியாளின் பாடல் நமக்கு கற்றுத்தரும் அநேக சத்தியங்களில் மூன்று சத்தியங்களை தியானிக்கலாம்.*

**பாடல்கள் தேவனுடைய இரட்சிப்பை வெளிப்படுத்துகிறது.**

என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூறுகிறது (லூக்1:47)

எலிசபெத்தும் மரியாளும் வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்ட சம்பவம் லூக்கா முதலாம் அதிகாரம் 40ஆம் வசனம் முதல் வாசிக்கிறோம். லூக்1:46-55 வரை மரியாளின் கீதம் என்று போற்றப்படுகிறது. அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக: ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் (மத்1:2) நீதியும் தேவபக்தியும் பரிசுத்த ஆவியும் நிறைந்த இஸ்ரவேலின் ஆறுதல்வரக் காத்திருந்த சிமியோன் இயேசுவை கைகளில் ஏந்தி ஸ்தோத்தரித்து உம்முடைய இரட்சண்யத்தை என் கண்கள் கண்டது. (லூக்2:32) என்று பாடுகிறார். கிபி1820ல் நியூயார்க்கில்



பிறந்த பிரான்செஸ் ஜேன் கிராஸ்பி ஆறுவார குழந்தையாய் இருக்கும்போது கடும் ஜீரத்தினால் கண்பார்வை முற்றும் நிரந்தரமாக இழந்தாள். ஆனால் மிகச்சிறப்பான பாடகியாக மாறி தேவனுடைய இரட்சிப்பை வெளிப்படுத்துகிற ஆயிரக்கணக்கான பாடல்களை பாடினாள் சுமார் 8000 பாடல்கள் இயற்றி, பாடி இருக்கிறார்கள். கண்பார்வை இழந்த ஜேன் இயற்றிய பாடல்களில் ஒன்று தான் இப்பாடல் (Jesus keep me near the cross)

"இயேசுவே கல்வாரியில் என்னை வைத்துக்கொள்ளும்
பாவம் போக்கும் ரத்தமாய் திவ்விய ஊற்றைக் காட்டும்.''
"பாவியேன் கல்வாரியில் இரட்சிப்பை பெற்றேனே
ஞான ஜோதி தோன்றவும் கண்டு பூரித்தேனே"

இப்படி இவர்களுடைய ஒவ்வொரு பாடலின் அடிகளிலும் இரட்சிப்பின் நற்செய்தி அனுபவமாய் வெளிப்படுகிறது. கண்பார்வை தெரிந்திருந்தால் இத்தனை ஆயிரம் பாடல்களை என்னால் இயற்றியிருக்க முடியாது எனக்கூறும் இவளின் வார்த்தைகள் இன்னும் நம்மை சிந்திக்க வைக்கிறதல்லவா? நாம் பாடுகிற பாடலின் வார்த்தைகள் தேவனுடைய இரட்சிப்பை வெளிப்படுத்துகிறதா?

***பாடல்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது.***

மரியாள் இயேசுகிறிஸ்துவை பாடும்போது, என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது (லூ1:46) வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார் (லூக்1:49) சிமியோன் இயேசுபாலனைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு தேவனை ஸ்தோத்தரித்து புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும் உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும் என்று பாடினார் (லூக்2:30) பரமசேனையின்திரள் அந்த தூதனுடனே தோன்றி உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள் (லூக்2:13,14) தாவீது ராஜா பாடுகிறார் வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது (சங்19:1) தேவனுடைய நாமத்தை (அவரை) ஸ்தோத்திரத்தினால் மகிமைப்படுத்துவேன் (சங்69,30) நீங்கள் பாடும் போது தேவனுடைய நாமம் மகிமைப்பட வேண்டும். மகிமையை தேவனுக்கே செலுத்த வேண்டும். பிரான்செஸ்ரிட்லி அம்மையார் 1874ஆம் ஆண்டில் "எந்தன் ஜீவன் இயேசுவே, சொந்தமாக ஆளுமே" என்ற பாடலை இயற்றினார்கள் கிறிஸ்துவுக்கு முற்றும் அர்ப்பணித்ததால் உண்டாகும் மகிழ்ச்சியை அனுபவிக்க எப்பொழுதும் மக்களுக்கு அறைகூவலிட்டார்கள்.

"எந்தன் ஆஸ்தி தேவரீர், முற்றும் அங்கிகரிப்பீர்'' என்ற வரியை எழுதியதும், தனது நகைகள் யாவற்றையும் விலை உயர்ந்த நகைப்பெட்டியையும் மிஷனெரி பணிக்கு அனுப்பிவிட்டார்கள் இவ்வளவு குதுகலமாய் நான் என்றுமே எதையுமே மூட்டை கட்டியதில்லை என சாட்சி கூறினார்கள்.

" எந்தன் ஆஸ்தி தேவரீர் முற்றும் அங்கிகரிப்பீர்
புத்தி கல்வி யாவையும் சித்தம்போல் பிரயோகியும் என்று பாடினார்கள்

பாடல்களை எழுதுவதோடு, பாடுவதோடு, கேட்பதோடு நின்றுவிடாமல் மகிமையை தேவனுக்கு செலுத்த வேண்டும் தேவமகிமை வெளிப்படவேண்டும்.

***பாடல்கள் தேவனுடைய துதியை வெளிப்படுத்துகிறது.***

கர்த்தரை துதியுடன் பாடிகொண்டாடுங்கள் (சங்147:7) தேவனுடைய நாமத்தை பாட்டினால் துதிப்பேன் (சங்69:30) அவர்கள் ஒருமிக்கப் பூரிகைகளை ஊதி ஏகசத்தமாய் கர்த்தரைத் துதித்து ஸ்தோத்தரித்து பாடினார்கள் (2நா5:13)யோசபாத் ராஜா கர்த்தைத் துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளதென்று கர்த்தரைப் பாடவும் பாடகரை நிறுத்தினான் (2நாளா20:21). ஆவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடின பின்பு ஒலிவமலைக்குப் புறப்பட்டுப்போனார்கள் (மத்26:30). பாடல்கள் தேவனுடைய துதியைச் சொல்லவேண்டும் ஆங்கில பாமாலை பாட்டுகளின் தந்தை என்று அழைக்கப்படும் ஐசக்வாட்ஸ் இங்கிலாந்தைச் சேர்ந்தவர் அவரது தந்தை அவருடைய விசுவாசத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். கிரேக்கு, எபிரேய, லத்தீன் மொழிகளில் புலமைப்பெற்ற மேதையான வாட்ஸ் 60க்கும் மேற்பட்ட புத்தகங்கள் எழுதியுள்ளார் அவைகளில் சில ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பாட புத்தகமாயிருந்தது 600க்கும் மேற்பட்ட அவருடைய தேவனைத் துதிக்கும் பாடல்கள் உலகப் புகழ்பெற்றன.

என் அருள்நாதா இயேசுவே, சிலுவைக்காட்சி பார்க்கையில்
பூலோக மேன்மை நஷ்டமே, என்றுணர்ந்தேன் என் உள்ளத்தில்
சராசரங்கள் அனைத்தும் அவ்வன்புக்கு எம்மாத்திரம்
என் ஜீவன் சுகம் செல்வமும் என் நேசருக்கு பாத்தியம்

உங்கள் வாழ்க்கையின் மேன்மைகளை தேவனைத் துதிக்க பயன்படுத்துகிறீர்களா? தேவனைத் துதித்துப் பாடுங்கள்.

கிறிஸ்துவின் பிறப்பை அறிவிக்க நீங்கள் எழுதுகிற. பாடுகிற, கேட்கிற ஒவ்வொரு பாடலின் வரிகளும் தேவனுடைய இரட்சிப்பின் செய்தியை வெளிப்படுத்தட்டும். தேவனுடைய மகிமையை வெளிப்படுத்தட்டும், தேவனை துதிக்கும் துதியை வெளிப்படுத்தட்டும் உங்கள் அனைவருக்கும்

**கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்**
**எங்கள் அன்பின் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்.**

---

16ம் பக்க தொடர்ச்சி

29:15 - பிரம்பும் கடிந்துகொள்ளுதலும் ஞானத்தைக் கொடுக்கும்; தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டுபண்ணுகிறான்.

29:17 - உன் மகனைச் சிட்சைசெய், அவன் உனக்கு ஆறுதல்செய்வான், உன் ஆத்துமாவுக்கு ஆனந்தத்தையும் உண்டாக்குவான்.

30:11 - தங்கள் தகப்பனைச் சபித்தும், தங்கள் தாயை ஆசீர்வதியாமலும் இருக்கிற சந்ததியாருமுண்டு.

30:17 - தகப்பனைப் பரியாசம்பண்ணி, தாயின் கட்டளையை அசட்டைபண்ணுகிற கண்ணை நதியின் காகங்கள் பிடுங்கும், கழுகின் குஞ்சுகள் தின்னும்.



# *“உங்களால் தேவனின் குரலைக் கேட்கமுடியும்”*

Dr. P. செல்வராஜ், கோவை

நாம் தேவனின் பிள்ளைகள் இன்னொரு வகையில் கூறினால் நாம் தேவனுடைய குடும்பத்தின் உறுப்பினர்கள். நம் ஒவ்வொருவருக்கும் தேவனோடு உறவு இருக்கிறது. அந்த உறவு நெருங்குகிற உறவாக இருக்க வேண்டும் என்பதே தேவனுடைய நோக்கமாகும். உரையாடல் இல்லாத உறவு என்ன உறவு? நாம் தேவனோடு பேச வேண்டும் (மன்றாட்டு). தேவனின் குரலை நாம் கேட்க வேண்டும். இந்த உரையாடலுக்கு உதவியாக நான்கு குறிப்புகளைப் பார்ப்போம் :

யோவான் 17:3 இவ்வாறு கூறுகிறது : “உண்மையான ஒரே தேவனையும் அவர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நிலை வாழ்வு” (மொழிநடை மாற்றப்பட்டிருக்கிறது). உரையாடலே இல்லாமல் ஒருவரை நாம் உண்மையில் அறியமுடியுமா? எனவே, தேவனையும், மீட்பரையும் அறியவேண்டுமெனில் அவரோடு நாம் பேச வேண்டும், அவர் பேசுவதை நாம் கேட்கவேண்டும், மன்னிக்கவும், கவனிக்கவேண்டும். ஒரு பாடல் வரி இப்படி இருக்கிறது : ‘அவர் (இயேசு) பேசுவதை எங்கு கேட்கலாம்’ நாம் இருக்கும் இடத்திலேயே கேட்க முடியும். (திருச்சபைக்குச் செல்ல வேண்டியதில்லை என்பது அதன் பொருளல்ல). தேவனின் குரல் நம்முடைய எண்ண அலைகளாகவும் தொனிக்கலாம். ஆபகூக் 2:2 “என் வாயிலாக ஆண்டவர் என்ன கூறப்போகின்றார் என்று(ம்)... காத்திருப்பேன்” என்று கூறுகிறாரல்லவா? ஆம், தேவனின் குரல் நம்மில் எண்ண அலைகளைக் கொண்டுவரக்கூடியது.

இரண்டாவதாக, தேவனின் குரலுக்கு நாம் காத்திருக்க வேண்டும். நாம் இருக்கும் இடம் அமைதியற்றதாக இருக்கலாம். ஆனால், நம்முடைய இதயத்தை அமைதியினால் நிரப்பமுடியுமே! சங்கீதம் 46:10 “அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்” என்று கூறுகிறதல்லவா?

மூன்றாவதாக, நாம் மன்றாடும்போது நம்முடைய உளக்கண்கள் தேவனின்மேல், இயேசுவின்மேல் பதிந்திருக்க வேண்டும். இதைத் தூயஆவியில் பார்த்தல் என்றும் கூறலாம். “குறித்த காலத்தில் நிறைவேறுவதற்காகக் காட்சி இன்னும் காத்திருக்கின்றது; முடிவை நோக்கி விரைந்து செல்கின்றது” என்று ஆபகூக் 2:3ல் நாம் வாசிக்கிறோம்.

நான்காவதாக, தேவன் நமக்கு வெளிப்படுத்துவதை ஒரு கையேட்டில் குறித்து வைப்பது நல்லது. “காட்சியை எழுதிவை...” என்றும் ஆபகூக் 2:3 கூறுகிறது. ஏனெனில், அது நிறைவேறுவதை நாம் காண்போம். “அது (காட்சி) நிறைவேறியே தீரும்” (ஆபகூக் 2:3) “எதிர்பார்த்துக் காத்திருப்பதற்கு” எழுதி வைப்பது உதவியாக, பயனுள்ளதாக இருக்கும். ஆமென்!

---

**வாழ்த்துகிறோம்**

நமது ஏழாயிரம்பண்ணை தேவனுடைய கூடாரத்தில் ஊழியம் செய்த மிஷனெரி சகோதரி ராணி. சகோ. மோசஸ் உடன் திருமணத்தில் 24.10.2012 அன்று தேவசமுகத்தில் இணைக்கப்பட்டார் அவர்களை வாழ்த்துகிறோம்.

# தேவனைத் துதிப்போம் வாருங்கள்

**தூத்துக்குடி மாவட்டம்**

**பணித்தளம் : திருக்களூர்:**

**பால்குளம் :** சகோ. துரை அவர்கள் குடும்பத்திற்கு சொந்த இடம் கொடுத்த தேவனைத் துதிப்போம்.

**மானாட்டூர் :** ஜெபதரன் என்ற சிறுவனுக்கு ஏற்பட்ட மஞ்சள் காமாலை நோயிலிருந்து தேவன் விடுதலை கொடுத்ததற்காக துதிப்போம்.

**சொக்கனூர் :** ரவி அவர்களுக்கு வீடு கட்டி முடிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**பணித்தளம் : ஆண்டாள் நகர்**

ஆலயத்திற்கு மூன்று மாத காலமாக வராமல் இருந்த கிரேஸ் செல்வபாக்கியம் அவர்களை தேவன் மீண்டுமாக ஆலயத்திற்கு வரச்செய்தார் அதற்காக துதிப்போம்.

**பணித்தளம் : பேட்மாநகரம்**

பேரூரில் 29/9/12/ 30/9/12 ஆகிய 2 நாட்கள் நற்செய்தி கூட்டம் நடத்த தேவன் கிருபை செய்தார். அதன் தேவைகளும் சந்திக்கப்பட்டது அதற்காக தேவனை துதியுங்கள்.

பணித்தளம் : **ஸ்ரீமூலக்கரை**

**திருப்புளியங்குடியில்** ஜெபவீடு கட்டிடப்பணி தொடர்ந்து நடைபெறு வதற்கும், கம்பி வாங்குவதற்கும் கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **பட்டாண்டிவிளை**

சகோதரி. சொர்ணலதாவின் தகப்பனாருக்கு கர்த்தர் சரீரத்தில் சுகத்தை கட்டளையிட்டதற்காகத் தேவனைத் துதியுங்கள்.

**Engg College Hostel warden** அம்மாவுக்குக் கர்த்தர் பெலன் கிடைக்கப் பண்ணினதற்காகத் தேவனைத் துதியுங்கள்.

பணித்தளம் : **தாளமுத்துநகர்**

குடும்ப பிரச்சனையினால் மருந்து குடித்து மிகவும் மோசமான நிலையில் இருந்த சகோ. ரவிக்குமார் அவர்களுக்கு தேவன் சுகம் கொடுத்தபடியால் தேவனைத் துதிப்போம்.

**விருதுநகர் மாவட்டம்**

பணித்தளம் : **புல்லக்கவுண்டன்பட்டி**

ஆலயபிரதிஷ்டைக்கு பண தேவையை சந்திப்பதற்கு சபை விசுவாசிகளை தேவன் எழுப்பித் தந்தற்காக தேவனைத் துதியுங்கள்.

பணித்தளம் : **ஜமீன்சல்வார்பட்டி**

பூச்சக்காபட்டி என்ற ஆலயமில்லா கிராமத்தில் 2 நாள் நற்செய்தி கூட்டத்தை எவ்வித தடையின்றி தேவன் நடத்தி தந்ததிற்காக...

பணித்தளம் : **முத்தாண்டியாபுரம்**

சந்தணமாரி என்ற சகோதரிக்கு தேவன் ஏற்ற துணையை தந்ததற்காக தேவனைத் துதியுங்கள்.



பணித்தளம் : **பண்டுதன்பட்டி**

**நக்கமங்கலம்** என்ற கிராமத்தில் சகோதரி. வித்யாவிற்கு டெங்கு காய்ச்சலிருந்து கர்த்தர் கொடுத்த சுகத்திற்காக தேவனைத் துதியுங்கள்.

பணித்தளம் : **சிவகாசி**

24.10.2012 அன்று நடைபெற்ற வாலிபர் வெற்றி முகாமில் கிறிஸ்த வரல்லாத வாலிபர்கள் ஏராளமாக கலந்து கொண்டதற்காக

பணித்தளம் : **ஏழாயிரம்பண்ணை**

சகோதரி லதாவின் மகன் Aeronatic இன்சினியரிங் படித்திருக்கிறார்கள். Interview வரச்சொல்லி அனுமதி கிடைத்திருக்கிறது

பணித்தளம் : **அய்யனேரி**

சகோ. ஜெயசங்கர் அவர்களுக்கு சிறுநீரக பிரச்சனையிலிருந்து தேவன் விடுதலை கொடுத்தற்காக துதியுங்கள்.

பணித்தளம் : **பழையஅப்பனேரி**

ஆலய பிரதிஷ்டை ஜெபத்தை தேவன் ஆசீர்வாதமாக மாற்றியதால் தேவனை துதிப்போம். குடும்பமுகாம், மருத்துவ முகாமை தேவன் ஆசீர்வதித்து கொடுத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **சாத்தூர் ரூரல்**

இந்த மாதம் நடைபெற்ற இயேசுவோடு இனிய வாலிபர் மாலை கூட்டத்தில் அநேக மாணவியர் கலந்து கொள்ள தேவன் கிருபை செய்தற்காக சகோ. முனியசாமின் கடன் பிரச்சனையை தேவன் மாற்றியதற்காக

**திருநெல்வேலி மாவட்டம்**

பணித்தளம் : **மைப்பாறை**

சகோதரி. லீதியாள் ஆஸ்துமா நோயால் கஷ்டப்பட்டார்கள் ஜெபித்தோம் கர்த்தர் கொடுத்த சுகத்திற்காக தேவனைத் துதியுங்கள்.

**காசிலிங்காபரம்:** எஸ்தர் என்ற குழந்தை 1 மாதம் இரவும் பகலும் அழுதது ஜெபம் செய்தோம் அமைதியாகிவிட்டது அதற்காக தேவனைத் துதிப்போம். நமது மிஷனெரி சகோ. எமீம்மாள் அவர்களுக்கு வயிற்றில் பெலவீனப்பட்டு கஷ்டப்பட்டார்கள் சபை விசுவாசிகள் அனைவரும் சேர்ந்து ஜெபித்தோம் தேவன் அறபுதம் செய்தார் தேவன் கொடுத்த விடுதலைக்காக...

பணித்தளம் : **வடமலாபுரம்**

சமத்துவபுரம் என்ற கிராமத்தில் பியூலா சகோதரியின் கணவர் ஆலயத்திற்கு வராமல் இருந்தார்கள். இப்பொழுது தொடர்ந்து ஆலயத்திற்கு வர கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**திருப்பூர் மாவட்டம்**

**பணித்தளம் : தொட்டிப்பாளையம்**

சகோதரி விஜயா விசுவாச வாழ்க்கையில் வளர்ந்து வருவதற்காக தேவனைத் துதியுங்கள்.·. சகோதரி. எப்சிபா B.A. முதலாம் ஆண்டு எல்லா தேர்விலும் கர்த்தர் நல்ல வெற்றியை தந்ததிற்காக தேவனைத் துதியங்கள்.

**திண்டுக்கல் மாவட்டம்**

பணித்தளம் : **தொட்டாம்பட்டி**

சின்னத்தாய் என்ற சகோதரி கிழே விழுந்து நீண்ட நாட்களாக நடக்க முடியாமல் இருந்த சகோதரியை தேவன் நடக்க செய்ததற்காக தேவனைத் துதியுங்கள். சகோதரி அழகம்மாய்அவர்களுக்கு நல்லபாம்பு கடித்து டாக்டர் முடியாத என்று சொல்லியும் ஜெபித்தபொழுது தேவன் பூரண சுகம் கொடுத்தார் தேவனைத் துதியுங்கள்.

**அரியலூர் மாவட்டம்**

பணித்தளம் : **மிஸ்பா வெத்தியார்வெட்டு**

பின்மாற்றத்தில் இருந்த தேவபிள்ளைகளை அனுதினமும் சபைக்கு கொண்டு வந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**இளையபெருமாள் நல்லூர்:** பின்மாறிப் போன வைத்திநாதன் குடும்பம் மீண்டுமாக கர்த்தருக்கள் வந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**மதுரை மாவட்டம்**

பணித்தளம் : **திரளி**

சிறுவர் முகாமை தேவன் ஆசீர்வதித்து தந்ததற்காகவும். தேவைகளை சந்தித்தற்காகவும், சுமார் 200 பிள்ளைகள் கலந்து கொள்ள கர்த்தர் கிருபை செய்தற்காகவும் தேவனைத் துதிப்போம்.

## செய்திகள்

- ❖ தமிழகம் வேறெந்த மாநிலமும் சாதிக்காத சாதனையை மது விற்பனையில் சாதித்துள்ளது என்பது பரிதாபமே.
- ❖ 2003-04இல் டாஸ்மாக் மது விற்பனை மூலம் கிடைத்த ஆண்டு வருவாய் ரூ.3,500 கோடி.
- ❖ 2010-12இல் டாஸ்மாக் மது விற்பனை மூலம் கிடைத்த ஆண்டு வருவாய் ரூ.18ஆயிரம் கோடியாக ஆறு மடங்கு உயர்ந்திருக்கிறது.
- ❖ 2012-13ஆண்டுக்கான வருவாய் இலக்கு ரூ21 ஆயிரம் கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- ❖ தமிழகத்தில்16%பேர் குடிகாரர்களாக உள்ளார்கள் அதிக குடிகாரர்களை கொண்ட 2வதுமாநிலமாக தமிழகம் உள்ளது.
- ❖ உத்திரபிரதேசம் 21% பேரை குடிகாரர்களாகக் கொண்டு இந்தியாவில் அதிக குடிகாரர்களைக் கொண்ட முதலாவது மாநிலமாக உள்ளது.
- ❖ சினிமாவில் மது அருந்துவது பார்க்கும் இளம் ரசிகர்கள் நடுவில் குடிப்பழக்கம் 3 மடங்கு அதிகமாகி இருக்கிறது என்கிறது ஆய்வு.
- ❖ தமிழகத்தில் மது அருந்துவோர் ஒரு கோடி பேர்.
- ❖ தமிழகத்தில் உள்ள எய்ட்ஸ் நோயாளிகளில் 90% பேர் குடிப்பழக்கம் உடையவர்கள்.
- ❖ 15 ஆண்டுகளுக்கு முன்பாக மதுவுக்கு அறிமுகமாகும் வயது 25 ஆக தமிழகத்தில் இருந்தது. அது இப்போது 13 ஆக குறைந்திருக்கிறது.
- ❖ 60 சதவகித சாலை விபத்துக்களுக்கு தமிழகத்தில் மதுவே காரணமாக இருக்கிறது.

**தமிழகத்திற்காக ஜெபியுங்கள்.**



## ஃபிலியோ 2013 இளைஞர் இனிய பெருவிழா ஜெபக்குறிப்புகள்

1. 2013 பிப்ரவரி 13 அந்த நாளை தேவன் பொறுப்பெடுத்து எல்லா சூழ்நிலைகளையும் சாதகமாக மாற்றித்தர
2. கூட்ட நாளிற்கு முன்போ அந்த நாளிலோ எந்த அசம்பாவிதங்கள் (பந்த், கலவரம், மரணம் போன்றன) நடைபெறாதபடி தேவன் காத்துக்கொள்ள.
3. கூட்டத்திற்கு 15,000க்கு மேற்பட்ட வாலிப சகோதர, சகோதரிகளை தேவன் அழைத்து வர..
4. அநேக கிறிஸ்தவரல்லாத வாலிப சகோதர சகோதரிகள் கலந்து கொள்ள.
5. கூட்டத்தில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் யோவான்15:15இன்படி இயேசுவை தங்கள் சிநேகிதராக ஏற்றுக்கொள்ள.
6. செய்தியாளரை தேவன் (சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள்) வல்லமையாய் பயன்படுத்த..
7. கூட்டத்திற்காக அச்சிடப்படவுள்ள நோட்டீஸ் 50ஆயிரம். நோட்டீஸ் பெறும் ஒவ்வொரு உள்ளங்களிலும் தேவன் பேசி அழைத்து வர.
8. கூட்டத்திற்கு வரும் ஒவ்வொருவருக்கும் நன்றாக கேட்கக்கூடிய அளவில் மைக்செட் அமைப்பை அமைக்க தேவன் மைக்செட் சகோதரர்களுக்கு ஞானம் கொடுக்க.
9. சத்துருவின் வல்லமைகள் செய்திக்கு விரோதமாய் எழும்பாதபடிக்கு.
   அ. தேவதூதர்கள் மைதானம் எங்கும் உலாவ.
   ஆ. பரிசுத்த ஆவியானவர் வல்லமையாய் அசைவாட.
   இ. செய்தியை கேட்கிறவர்கள் கண்ணீரோடு மனந்திரும்ப..
   ஈ. காய்கனி மார்க்கட் மைதானம் தந்த பொறுப்பாளர்களுக்காய் தேவனை துதியுங்கள்.
   உ. மைதானத்தை தேவ ஆவியானவர் பொறுப்பெடுக்க.
   ஊ. மைதானத்தில் நடைபெற வேண்டிய பணிகள் தேவ ஞானத்தோடு செயல்பட.
10. பள்ளிகள் கல்லூரிகள் சந்திக்கப்படும்போது மாணவ மாணவிகளை அனுப்ப தேவன் திறந்த வாசலைத் தர
11. கூட்டத்திற்காக உழைக்கும் நமது ஊழியர்கள் ஒவ்வொருவரும் வியாதிப்படாது பாதுகாக்கப்பட.
12. நமது ஊழியர்கள் தன்னார்வ ஊழியர்கள் கூட்டம் காரியமாகவோ எதற்காகவோ பிரயாணம் செய்யும்போது பாதுகாக்கப்பட.
13. கூட்டத்திற்காக உழைப்போர் செயல்படுவோர் நடுவில் ஒருமனம் காணப்பட.
   அ. பிசாசானவன் ஒருமனதை உடைக்காமல் இருக்க.
   ஆ. கூட்டங்களுக்கு விரோதமான மனுஷ சக்திகள் கட்டப்பட.
   இ. கூட்டத்திற்கு விரோதமான பிசாசின் வல்லமைகள் கட்டப்பட.
   ஈ. கூட்டத்திற்கு போலீஸ் அனுமதி கிடைக்க.
   உ. சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் விரோதமாய் செயல்படாது இருக்க.

ஊ. சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் செயல்பாடுகள் கூட்டத்திற்கு நல்ல அனுகூலமாய் மாற.

14. இசை வாசிக்கிறவர்கள் மேல் கர்த்தரின் அபிஷேகம் தங்க.
15. தன்னார்வ ஊழியர்கள் ஏராளம் எழும்ப.
16. வால்போஸ்டர்கள் பார்ப்பவர்களோடு கர்த்தர் பேசி அழைத்து வர.
    அ. விளம்பர போர்டுகள் வைக்கப்படும் இடங்களில் பாதுகாப்பாக இருக்கவும் பார்ப்பவர்கள் ஏராளம் வரவும்.
    ஆ. TV விளம்பரம் பார்ப்பவர்களோடு தேவன் பேசி கூட்டத்திற்கு அழைத்து வர ஜெபியுங்கள்.
17. எல்லா சபைகளிலும் நல்ல ஒத்துழைப்பு கிடைக்க ஜெபியுங்கள்.
18. எசேக்கியேல் 39:2இன்படி கர்த்தர் வாலிபர்களை மாணவர்களை திருப்பி அழைத்து வர.
19. எசேக்கியேல் 39:2இன்படி கர்த்தர் வாலிபர்களை, மாணவர்களை ஆறு துறடுகளால் இழுத்து வர.
20. ஓசியா 11:4இன்படி வாலிபர்களை, மாணவர்களை மனுஷரை கட்டி இழுக்கிற அன்பின் கயிறுகளால் கர்த்தர் இழுத்து அழைத்து வர.
21. ஓசியா 7:12இன்படி அவர்கள் போகும் போது கர்த்தர் தமது வலையை வீசி ஆகாயத்துப் பறவைகளைப் போல பிடித்துக் கொண்டு வரும்படியாக.
22. ஓசியா 11:8இன்படி எப்பிராயீமே நான் உன்னை எப்படிக் கைவிடுவேன் என கைவிடாது அழைத்து வர.
23. ஓசியா 14:4 இன்படி கூட்டத்திற்கு வரும் வாலிபர்களின் சீர்கேட்டை கர்த்தர் குணமாக்க.
24. நாகூம் 1:13இன்படி வாலிபர்களையும், மாணவர்களையும் நுகத்தை முறித்து கட்டுகளை அறுத்து அழைத்து வர.
25. செப்பனியா 3:18இன்படி சஞ்சலப்பட்ட வாலிபர்களையும், மாணவர்களையும் தேவன ஏகமாய் கூட்டிக் கொண்டு வர.
26. செப்பனியா 3.19அன்படி வாழ்வில் நொண்டியான, தள்ளுண்ட வாலிபர்களையும், மாணவர்களையும் கர்த்தர் சேர்த்து அழைத்து வர
27. ஆகாய் 2:8இன்படி வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது என்ற சேனைகளின் கர்த்தர் கூட்டத்தின் தேவைகளை சந்திக்க.
28. சகரியா 2:6 இன்படி ஓகோ என்று எழும்பி வாலிபர்கள், மாணவர்கள் ஒடி வந்து கூட்டத்தில் சேர.
29. சகரியா 8.5 இன்படி கூட்ட மைதானத்திலே ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் நிறைந்திருக்க.
30. சகரியா.10:8, ஏசாயா5:26 இன்படி கர்த்தர் வாலிபர்களை, மாணவர்களை பயில்காட்டி அழைத்து வர.
31. கூட்டத்தின் தேவை ரூ.3 ½ லட்சம் சந்திக்கப்பட.
    அ. மேடை அமைக்க ஆகும் செலவை தாங்கும் நபர் எழும்ப.
    ஆ. மேடை ஸ்கிரின் மற்றும் அமைப்புகளின் செலவை தாங்கும் நபர் எழும்ப,



இ. ஒலி, ஒளி அமைப்பு செலவை பொறுப்பெடுக்கும் நபரை தேவன் எழுப்ப,

ஈ. 50 ஆயிரம் நோட்டீஸ் அச்சிட ஆகும் செலவை சந்திக்கும் நபரை எழுப்ப,

உ. இரண்டு ஆயிரம் வால்போஸ்ட் அச்சிட ஆகும் செலவை சந்திக்கும் நபரை தேவன் எழுப்ப.

ஊ. பந்தல் அமைக்க ஆகும் செலவை சந்திக்கும் நபரை தேவன் எழுப்ப

எ. மைதானத்தில் வைக்கப்படும் T.Vகளின் மொத்த வாடகை செலவை பொறுப்பெடுக்கும் நபரை தேவன் எழுப்ப.

ஏ. விளம்பர போர்டுகள், பேனர்கள் சுவர் விளம்பரங்களின் செலவை பொறுப்பெடுக்கும் நபர் எழும்ப.

---

## V.B.S. 2012

இந்த ஆண்டு V.B.S. பணியில் இணைந்து தன்னார்வமாக பணியாற்றிய விடுபட்ட சகோதரர், சகோதரிகள் பெயர் பட்டியலை தந்துள்ளோம். இவர்களில் பலர் பல ஆண்டுகளாக நமது ஆலயமில்லா கிராமத்தில் நம்மோடு இணைந்து செயலாற்றி வருகிறவர்கள். சிலர் இந்த ஆண்டு புதிதாகவும் இணைந்து செயலாற்றி உள்ளனர். இணைந்து செயலாற்றிய 217 தன்னார்வ ஊழியர்கள் பெயர்களும் 295 V.B.S. நடைபெற்ற இடங்களும் ஏற்கனவே உங்கள் ஜெபத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது விடுபட்ட 2 V.B.S. இடங்களும் 41 தன்னார்வ ஊழியர்களின் பெயர்களும் உங்கள் ஜெபத்திற்காக தரப்பட்டுள்ளது. தேவன் இவர்களை பெலப்படுத்த ஆசீர்வதிக்க தொடர்ந்து ஊழியங்களில் ஆசீர்வாதமாய் பயன்படுத்த ஜெபியுங்கள்.

**நெல்லை மாவட்டம்**

பணித்தளம் : **அத்தியூத்து**

218 Sis. கிரேஸ்
219 Sis. மரியாள்
220 Sis. செல்வி
221 Sis. முத்துக்கனி
222 Sis. பிரிஸ்கில்லாள்
223 Sis. அருணா
224 Bro. ரமேஷ்
225 Bro. முருகன்
226 Sis. ராசுகுட்டி
227 Sis. காந்திமதி
228 Bro. ஜேம்ஸ்
229 Sis. சங்கீதா

**விருதுநகர் மாவட்டம்**

பணித்தளம் :

**7000 பண்ணை**

230 Sis. தெபோராள்
231 Sis. ஜோதி

**மதுரை மாவட்டம்**

பணித்தளம் : **திரளி**

232 Sis. முத்துலெட்சுமி

**நெல்லைமாவட்டம்**

பணித்தளம் : **அம்பை**

233 Sis. சாந்தி
234 Sis. ராணி
235 Sis. பிலோமி
236 Sis. ரத்தினபாய்
237 Sis. கனி
238 Sis. ஹெப்சிபா
239 Sis. புஷ்பா சந்திரசேகர்

**தூத்துக்குடி மாவட்டம்**

பணித்தளம் :

**பழைய அப்பனேரி**

240 Sis. செல்வமணி
241 Sis. மரியதெரஸா
242 Sis. சிவானி
243 Sis. தாமரைச் செல்வி
244 Sis. ஏஞ்சல்
245 Sis. பவித்ரா

பணித்தளம் : **பிச்சிவிளை**

246 Sis. நிசி
247 Sis. கரோலின்
248 Sis. எஸ்தர்
249 Sis. ரஞ்சிதம்
250 Sis. வசந்தி
251 Sis. கிரேனாப்பூ
252 Sis. வனிதா
253 Sis. ஜெயசீலி
254 Sis. ரஞ்சனி
255 Sis. மாலினி
256 Sis. திவ்யா ஜென்ஸி
257 Bro. அலெக்ஸாண்டர்
258 Bro. சாமுவேல்ராஜ்

**VBS இடங்கள்**

296 திருநெல்வேலி டவுண்
297 சிவந்திநகர்

## நீதிமொழிகளில்.... வேதமும் – பிள்ளையும்

**3:12** - தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல, கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச்சிட்சிக்கிறார்.

**10:5** - கோடைகாலத்தில் சேர்க்கிறவன் புத்தியுள்ள மகன்; அறுப்புக்காலத்தில் தூங்குகிறவனோ இலச்சையை உண்டாக்குகிற மகன்.

**13:24** - பிரம்பைக் கையாடாதவன் தன மகனைப் பகைக்கிறான்; அவன்மேல் அன்பாயிருக்கிறவனோ அவனை ஏற்கனவே தண்டிக்கிறான்.

**15:5** - மூடன் தன் தகப்பன் புத்தியை அலட்சியம்பண்ணுகிறான்; கடிந்துகொள்ளுதலைக் கவனித்து நடக்கிறவனோ விவேகி.

**15:20** - ஞானமுள்ள மகன் தகப்பனைச் சந்தோஷப்படுத்துகிறான்; மதியற்ற மனுஷனோ தன் தாயை அலட்சியம்பண்ணுகிறான்.

17:6 - பிள்ளைகளின் பிள்ளைகள் முதியோருக்குக் கிரீடம்; பிள்ளைகளின் மேன்மை அவர்கள் பிதாக்களே.

19:18 - நம்பிக்கையிருக்குமட்டும் உன் மகனைச் சிட்சைசெய்; ஆனாலும் அவனைக் கொல்ல உன் ஆத்துமாவை எழும்பவொட்டாதே.

19:26 - தன் தகப்பனைக் கொள்ளையடித்து, தன் தாயைத் துரத்தி விடுகிறவன், இலச்சையையும் அவமானத்தையும் உண்டாக்குகிற மகன்.

20:11 - பிள்ளையானாலும், அதின் செய்கை சுத்தமோ செம்மையோ என்பது, அதின் நடக்கையினால் விளங்கும்.

20:20 - தன் தகப்பனையும் தன் தாயையும் தூஷிக்கிறவனுடைய தீபம் காரிருளில் அணைந்துபோம்.

20:30 - காயத்தின் தழும்புகளும், உள்ளத்தில் உறைக்கும் அடிகளும், பொல்லாதவனை அழுக்கறத் துடைக்கும்.

22:6 - பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.

22:15 - பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும்; அதைத் தண்டனையின் பிரம்பு அவனைவிட்டு அகற்றும்.

23:13,14 - நீ பிரம்பினால் அவனை அடிக்கிறதினால் பாதாளத்துக்கு அவன் ஆத்துமாவைத் தப்புவிப்பாயே. என் மகனே, உன் இருதயம் ஞானமுள்ளதாயிருந்தால், என்னிலே என் இருதயம் மகிழும்.

23:22 - உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவிகொடு; உன் தாய் வயதுசென்றவளாகும்போது அவளை அசட்டை பண்ணாதே.

23:24 - நீதிமானுடைய தகப்பன் மிகவும் களிகூருவான்; ஞானமுள்ள பிள்ளையைப் பெற்றவன் அவனால் மகிழுவான

28:7 - வேதப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறவன் விவேகமுள்ள புத்திரன்; போஜனப்பிரியருக்குத் தோழனாயிருக்கிறவனோ தன் தகப்பனை அவமானப்படுத்துகிறான்.

28:24 - தன் தகப்பனையும் தன் தாயையும் கொள்ளையிட்டு, அது துரோகமல்ல என்பவன் பாழ்க்கடிக்கிற மனுஷனுக்குத் தோழன்.

தொடர்ச்சி 8ம் பக்கம்



**விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை**

*தேவனுடைய கூடாரத்தில்*

## திறப்பின் வாயில் ஜெபம்

**2012 டிசம்பர் 26 கடைசி புதன் – காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

*நீங்களும் வாருங்கள்! கலந்து கொள்ளுங்கள்! இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!*

*நேரில் கலந்து கொள்ள முடியாதவர்கள் உங்கள் ஜெப விண்ணப்பங்களை எங்களுக்கு கீழ்க்கண்ட முகவரியில் அனுப்பலாம்.*

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை–626 201. போன் 04562–258194

## சிறுவர் குதுகல முகாம்

நாள் : **29.12.2012 காலை 10 மணி முதல் 4 முடிய**

இடம் : **J.J. திருமணமண்டபம் ஏரல்.**

நடத்துபவர்

**ஆத்தும ஆதாய இயக்க குழுவினர்**

தொடர்பு: 94428-13511, 94421-20257

## *தூத்துக்குடியில் அற்புத உபவாச நாள்*

**நாள் : டிசம்பர் 18 – 3வது செவ்வாய்**

**நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

**இடம் : காமராஜர் திருமண மண்டபம், பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.**

### *நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம் | | | |
| Grace Ministries | SBIN0007629 | SBI Bazaar, Tuticorin | 10237757808 |
| Grace Ministries | TMBL0000156 | TMB Ltd., Sipcot Tuticorin | 156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம் | | | |
| Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம் | | | |
| Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.